பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 17 திங்கட்கிழமை 31.03.2025 கதிர் 143



இனிது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி வேட்புமனுக்கள் இலங்கை முழுவதும் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் விசாரணைக்கு முன்பாக ☞ 2

## சுன்னாகம் நிலத்தடி தண்ணீரில் மீண்டும் எண்ணெய்ப் படலமா?

### 5 கிணறுகளிலிருந்து மாதிரிகள் பரிசோதனைக்கு

சுன்னாக நிலத்தடி நீரில் மீண்டும் எண்ணெய் படலம் ஏற்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீர்வளங்கள் சபைக்கு உடுவில் பிரதேச அபிவிருத்தி குழு தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ பவானந்தராசாபணிப்புரைவிடுத்துள்ளார்.

சனிக்கிழமை உடுவில் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர் நாடாளுளமன்ற உறுப்பினர் ஸ்ரீ பவனந்தராஜா தலைமையில் இடம்பெற்றபோது சமூகமட்ட பிரதிநிதி ஒருவர் முன்வைத்த கோரிக்கையை அடுத்துஇந்தப்பணிப்புரைவிடுக்கப்பட்டது.

கூட்டத்தில்விவசாயிகள்எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்ட நிலையில் சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் சுன்னாக நிலத்தடி நீரில் நொதேன் பவர் தனியார் நிறுவனத்தால் வெளியேற்றப்படுகின்ற கழிவு எண்ணெய் நிலத்துக்கு கீழ் இறக்கப்பட்ட நிலையில் மக்களின் குடிதண்ணீர் கிணறுகள் தொடக்கம் விவசாய கிணறுகள் வரை கழிவு எண்ணெய் தாக்கம் உணரப்பட்டதாக முன்னர் குற்றச்சாட்டு-முன்வைக்கப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குகளும் இடம்பெற்றன.

அது தொடர்பாகச் சோதனைகள், விசாரணைகளும் இடம்பெற்றன. ஆனால் பின்னர் எந்தத் தீர்வுமின்றி இந்த விடயம் கிடப்பில் போடப்பட்டது. இப்போது இந்தக் கிணறுகளில் உள்ள தண்ணீரின் நிலை என்ன? அதிகாரிகள் இது தொடர்பில் சோதனை ஏதும் நிகழ்த்தி முடிவுகளை அறிவிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

அது மட்டுமல்லாது மருதனார் மடப் பகுதியில் அமைந்துள்ள வாகனங்கள் சுத்திகரிக்கும் நிலையத்தில் அதிகளவிலான அரச நிறுவனங்களின் வாகனங்கள் சுத்திகரிக்கப்படுகின்றன. அந்த நிலையம் அமைந்துள்ள பகுதி வளமான ☞ 8

பலஸ்தீன மக்களுக்காக

## குரல்கொடுப்பதைக் கூடத் தடுத்தால் கொழும்பில் மக்களை குவிப்போம்

### முஜிபுர் ரஹ்மான் எம்.பி. போர் பிரகடனம்

ஜனாதிபதி அநுரகுமாரவின் ஆளும்தரப்பு இஸ்ரேலுக்கு ஆதரவாக இருக்கட்டும் அதில் எங்களுக்கு பிரச்சினை இல்லை. ஆனால் பலஸ்தீனர்களுக்காக குரல்கொடுக்கும் எமது உரிமையை பறிக்க முற்பட்டால் ஆயிரக்கணக்கான மக்களை கொழும்பு நகரில் திரட்டிப் போராடுவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பலஸ்தீனத்தில்இடம்பெறும்மனிதபடுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஸ்டிகர் ஒட்டிய இளைஞனை ☞ 2

## தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பும் இனவாதத்தோடு செயற்படுவது தெளிவு

### பிரிட்டனின் தடை விடயத்தில் அடைக்கலநாதன் குற்றச்சாட்டு

தேசிய மக்கள் சக்தி ஆளும் தரப்பும் இனவாதத்துடனேயே செயற்படுகின்றதுஎன்பது,படைகளின் முன்னாள் தளபதிகள் மீது ☞ 2

# ஆனையிறவு உப்புக்கு சிங்களப் பெயர் மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடே

### ஐங்கரநேசன் கடும் கண்டனம்

**இலங்கையில் உப்பளங்களை நிர்வகித்து வருகின்ற தேசிய உப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனம் (National Salt Ltd) ஆனையிறவில் விளையும் உப்புக்கு றஜலுனு (Rajalunu) எனப் பெயரிட்டுள்ளது. இதுகாலவரையில் ஆனையிறவு உப்பு என விழிக்கப்பட்டு வந்த உப்பு றஜலுனு எனப் பெயரிடப்படும் அளவுக்கு, ஆனையிறவு ஒன்றும் உப்புச்சப்பற்ற இடப்பெயர் அல்ல. அது தமிழ் மக்களின் வரலாற்றில், வாழ்வியலில், பொருளியலில், போரியலில் பின்னிப்பிணைந்து அவர்தம் ஆன்மாவுடன் இரண்டறக் கலந்துவிட்ட பெயர். இங்கு விளையும் உப்பிற்கு சிங்களப் பெயர் வைக்கப்பட்டிருப்பது மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடே என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

**ஆனையிறவில் தயாரிக்கப்படும் உப்புக்கு 'றஜலுனு' என்ற வர்த்தக நாமம் சூட்டப்பட்டிருப்பது தொடர்பாக அவர் விடுத்திருக்கும் ஊடகக் குறிப்பில் இதனைதச் சுட்டிக்காட்டியுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:**

**யானைகள் தாவர உண்ணிகள் என்பதால் அவற்றின் உடலில் உப்புச்சத்துப் பற்றாக்குறை ஏற்படும்போது அவை உப்பைத்தேடிச்சென்று உண்பது வழமை. அப்படி வன்னிக் காட்டு யானைகள் உப்பைத் தேடிவந்த** ☞ 2

## நான்கே மாதங்களுக்குள் பலாலியை சர்வதேச விமான நிலையமாக்குவோம்

### நேரில் பார்த்த பின்னர் அமைச்சர் பிமல் உறுதி

எமக்கு முன்னைய ஆளும்தரப்புக்களைப் போல நாம் பொய் கூற மாட்டோம் பலாலி விமான நிலையத்தை நான்கே மாதங்களுக்குள் சர்வதேச விமான நிலையமாக மாற்றுவோம் என சிவில் போக்குவரத்து விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்திற்கு நேற்றுத் திடீர் பயணம் மேற்கொண்டா அமைச்சர் சர்வதேச விமான நிலையம் என்று சொல்லப்படும் அந்த இடத்தைச் சுற்றிப் பார்வையிட்டார். அங்கு பயணிக்களுக்குச் ☞ 2

## முன்னாள் ஜனாதிபதிகளுக்கு எதிராகவும் தடைவேண்டும்

### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்து

போர்க் குற்றங்களில் ஈடுபட்ட இராணுவத் தளபதிகளுக்கு பிரித்தானியா தடைகளை விதித்துள்ளதை நாம் வரவேற்கின்றோம். அதுபோலவே சில முன்னாள் ஜனாதிபதிகளுக்கு எதிராகவும் இவ்வாறான தடைகள் விதிக்கப்படவேண்டும் என வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் ☞ 8

## இந்திய மீனவர்கள் பிரச்சினை குறித்து விரைவில் அமைச்சு மட்ட கலந்தாய்வு

### அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக அமைச்சு மற்றும் அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரையாடல் வெகுவிரைவில் நடைபெறவுள்ளது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

இந்திய மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளை நேற்றுச் சந்தித்துப் பேசிய பின்னர் அவர் இதனைத் ☞ 8

## 47 வருடங்களின் பின்னர் யாழ். – திருச்சி இடையே மீண்டும் விமான சேவை

இலங்கையின் யாழ்ப்பாணத்திற்கும் இந்தியாவின் திருச்சி நகரத்திற்கும் இடையே 47 வருடங்களுக்குப் பின்னர் பொது விமானப் போக்குவரத்து சேவை நேற்றுத் தொடங்கப்பட்டது. இண்டிகோ விமான நிறுவனத்தினால் இந்தச் சேவை தொடங்கப்பட்டுள்ளது.

திருச்சியிலிருந்து 27 பணிகளுடன் நேற்று மதியம் 02.02 மணிக்கு முதல் விமானம் பலாலி சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது. ☞ 8

## 9 கி. கஞ்சா கலந்த மாவா யாழ். நகரில் சிக்கியது

### சந்தேகநபர்கள் இருவரும் கைது

யாழ்ப்பாணம் நகரில் 9 கிலோ 300 கிராம் கஞ்சா கலந்த மாவா பாக்கு நேற்றுப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. இதனை வைத்திருந்தவர்கள் என்ற சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்ட குற்றதடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி வழிகாட்டலில் உதவி பொலிஸ் பரிசோதகர் நந்தகுமார் குழுவினர் இந்தக் கஞ்சா கலந்த மாவாவைக் கைப்பற்றினர். ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

# புலம்பெயர் புலி ஆதரவாளர்களால் இலங்கைக்குப் பெரும் அச்சுறுத்தல்

## பதறுகிறார் தயாசிறி ஜயசேகர

போரின்போது பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம். ஆனால் அது குறித்த விசாரணைகள் உள்ளகப் பொறிமுறையின் கீழ் முன்னெடுக் கப்படவேண்டும். தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்களான புலம்பெயர் தமிழர்களின் அழுத்தங்களால்நாட்டுக்குப்பெரும்அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை குருணாகலில் செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதற்கு முன்னர் 58 பேருக்கு எதிராக இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் கவலைக்குரிய விடயம். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இதனை வழக்கமாகக் கொண்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் பிரித்தானியா தடை விதிப்பது இதுவே முதன்முறையாகும். எவரேனும் ஒருவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டால் அவை நிரூபிக்கப்பட்டால் அன்றி, குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டமைக்காக மாத்திரம் தடை விதிப்பது பொருத்தமற்றது.

இலங்கையில் போர் நிறைவடைந்து 16 ஆண்டுகளின் பின்னர் இவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. பட்டலந்த ஆணைக்குழுவில் ஆரம்பித்தது இன்று இந்த நிலமையில் வந்து நிற்கின்றது. பட்டலந்த மாத்திரமின்றி நாட்டில் 46 வதை முகாம்கள் காணப்பட்டன. எனவே இவற்றை தவிர்த்து பட்டலந்த குறித்து மாத்திரம் பேச முடியாது. ரணில் விக்கிரமசிங்கவை முடக்குவதற்காகவே பட்டலந்த தொடர்பில் மாத்திரம் பேசப்படுகிறது

பட்டலந்த வதை முகாம் தொடர்பில் ஆணைக்குழு அமைத்து விசாரணைகளை முன்னெடுப்பதாயின் உள்நாட்டு போரால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பிலும் உரிய நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றுபுலம்பெயர் தமிழர்கள் உள்ளிட்ட தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள்வலியுறுத்துகின்றனர். எனவே வெளிநாடுகளின் இவ்வாறு செயற்பாடுகள் முற்றாக நிராகரிக்கப்பட வேண்டியவையாகும். ஆனால் அயலுறவுத்துறை அமைச்சு இந்த விவகாரத்தில் அமைதியாகவுள்ளது.

இதே நிலைமை தொடர்ந்தால் இது நாட்டுக்கே அச்சுறுத்தலாக அமையும். எனவே இவ்வாறான விடயங்களில் நேர்மையாகவும்வெளிப்படைதன்மையுடனும் தீர்மானங்களைஎடுக்குமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்துகின்றோம்.

போரின்போது பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமாகும். ஆனால் அது குறித்த விசாரணைகள் உள்ளக பொறிமுறையின் கீழ் முன்னெடுக்கப்பட வேண்டும். கடந்த ஆண்டு உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. ஆனால் இந்த ஆளும்தரப்பு அந்த செயற்பாடுகளை இடைநிறுத்தியுள்ளது.

இங்கு உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழுவை மூடிவிட்டு, ஜெனீவாவுக்கு சென்று அமைச்சர் விஜித ஹேரத் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடுகின்றார் - என்றார்.

## இனி இது .....

தேர்தல் ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம், மனுதாரர்களின் சட்டத்தரணிகள் ஆகியோரைக் கூடிப்பேசி ஓர் இணக்கத்திற்கு வரமுடியுமா என்று பார்க்கும்படி உயர்நீதிமன்றம்பணித்திருந்தது.

மார்ச் 28 வெள்ளிக்கிழமை, உயர்நீதிமன்ற அமர்வு, நீதியரசர் துரைராஜா(ஊணளீ), நீதியரசர் மஹிந்த சமயவர்தன, மற்றும் நீதியரசர் சம்பத் அபயகோன் ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இடம்பெற்றபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஜனநாயகத் தேசியக் கூட்டணியால் தாக்கல் செய்யப்பட்ட எழுத்தானை மனு உட்பட, வேட்புமனுக்கள் நிராகரிப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டிருந்த 21 வழக்குகளின் பரிசீலனையின்போதே இந்த உத்தரவை நீதிமன்றம் விடுத்திருந்தது.

அதன்படி இந்த மூன்று தரப்பினருக்கும் இடையிலான கூட்டம் நேற்று நடைபெற்றது. .

அதன்படி, சட்டமாஅதிபர்திணைக்களத்தில், மேலதிகமன்றாடியார்நாயகம்(பு—ஷ்மிஷ்லிஜ-ழியி றீலியிஷ்உ_ஷ்மிலிஷ றூளஜளஷழியி) கனிஷ்கா டி சில்வா பாலபடபெந்தியும் 20 வழக்குகளில் மனுதாரர்களின் சார்பில், ஜனாதிபதிசட்டத்தரணிநிசாம்காரியப்பரும்ஒரு மனுதாரரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெஃப்ரி அழகரத்தினமும், வழக்கறிஞர்கள் குருபரன் மற்றும் இல்ஹாம் காரியப்பர் ஆகியோரும் கூட்டத்தில் கலந்துகொண்டு தமது வாதங்களை முன்வைத்தனர்.

பிறப்புச்சான்றிதழ்களால் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் குறித்து முக்கியமாக ஆராயப்பட்டுள்ளது. உதவிப் பதிவாளரின் சான்றுபடுத்தப்பட்ட நகல்களுக்கு பதிலாக உண்மையானவை என்று சமாதான நீதிவான்களால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வது குறித்து முக்கியமாக ஆராயப்பட்டது.

இந்த விடயத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு சார்பில் ஓர் இணக்கமான நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்த இணக்கநிலையை எட்டுவது என்று ஆணைக்குழு ஏற்கனவே தீர்மானித்திருந்தமையை இந்தப் பகுதியில் குறிப்பிட்டிருந்தமை வாசகர்கள் அறிந்ததே. நேற்றைய கூட்டத்திலும் இந்த விவகாரம் சுமுகமாகவே கலந்துரையாடப்பட்டு ஒரு இணக்கத்துக்கான ஏதுநிலை ஏற்பட்டது.

எனினும்சத்தியப்பிரமாணங்களில்ஏற்பட்ட குறைபாடுகளாலான நிராகரிப்புகள் மற்றும் பிழைகள்அல்லதுதேவையானதகவல்களின் குறைவுகளால் ஏற்பட்ட நிராகரிப்புக்கள் மற்றும் வேறு காரணங்களால் ஏற்பட்ட நிராகரிப்புக்கள் தொடர்பில் இணக்கம் ஏதும் ஏற்படவில்லை. நீதிமன்றத்தில் வாதங்களை முன்வைத்து அங்குதீர்ப்பைப்பெறவேண்டிய நிலையே காணப்பட்டதாக அறிய முடிந்தது.

தேர்தல் ஆணைக்குழுவும், அதிகாரிகளும் வேட்புமனுக்களை ஏற்பதற்காக வலியுறுத்தும் பல விடயங்கள் சட்டத்தில் கூறப்பட்டுள்ளவையோ கேட்கப்பட்டுள்ளவையோ இல்லை என்று சட்டத்தரணிகாரியப்பர்நீண்டஆணித்தரமான வாதங்களை முன்வைத்திருந்தபோதும் சட்டமா அதிபர் திணைக்களத்தினர் அதனை ஏற்பதற்குத்தயாராக இருக்கவில்லை என்றும் அறிய முடிந்தது.

இதனால், நாளை நீதிமன்றில் இந்த வழக்கு எடுக்கப்படும்போது, சமாதான நீதிவானின் கையெழுத்துடன் உண்மைப் பிரதி என்று உறுதிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்தவர்களது வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குவதாக தேர்தல் ஆணைக்குழு சார்பில்நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்படக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன.

இதனடிப்படையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களில் பல மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. ஆனால், யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்புமனு மற்றும் தமிழ் அரசுக் கட்சியின் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கான வேட்புமனு ஆகியன ஏற்றுக்கொள்ளப்படுவது நீதிமன்ற விசாரணைகளின் பின்னர்தான் முடிவு செய்யப்படக்கூடியதாக இருக்கும்.

"கலந்துரையாடல் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. பிறப்புச்சான்றிதழின் புகைப்பட நகல்களுக்கான நிராகரிப்பு, அனைவருக்கும் சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. மேலும், இந்த விவகாரத்தில் இறுதி நிலைப்பாடு நாளை உயர்நீதிமன்றத்தில் தெரிவிக்கப்படுமென அரசதரப்புசட்டத்தரணி உறுதியளித்துள்ளார்" என்று ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஆனையிறவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடமை என்பதால்தான் அதற்கு ஆனையிறவு என்று பெயர் வந்தது.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் வன்னி யானைகள் ஏற்றுமதியின் பொருட்டு யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் கொண்டு வரப்பட்டபாதையாகவும்இதுஅமைந்தமையும் இந்தப் பெயருக்கான காரணங்களில் ஒன்று.

ஆனையிறவுக் கடல் நீரேரிகளின் கரைகளில் உப்பு விளைவதை அவதானித்த ஆங்கிலேயர்கள் 1938இல் ஆனையிறவு உப்பளத்தை அமைத்தனர். இங்கு விளையும் உப்பை மூலப்பொருளாகக் கொண்டு 1954இல் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை உருவானது. உப்பளமும், இரசாயனத் தொழிற்சாலையும் போரும் உச்சம்பெறும் வரைக்கும் ஆயிரக்கணக்கானவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வேலைவாய்ப்புகளை வழங்கியிருந்தன.

ஆனையிறவின் கேந்திர முக்கியத்துவம் காரணமாக 1760இல் போர்த்துக்கேயர்கள் தங்களது இராணுவத் தளமாக இங்கு கோட்டையொன்றை உருவாக்கினர். பின்னர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்று இலங்கையை ஆண்ட அந்நியர்களிடம் கைமாறிய இக்கோட்டை சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் வசமாகியது. 1952இல் இக் கோட்டை நவீனவசதிகளுடன் கூடிய இராணுவத் தளமாக வடிவமைக்கப்பட்டது.

ஆனையிறவுப் பாதையால் பயணிப்பது என்பது சாவுக் குகையினூடாகச் செல்வதற்கு ஒப்பானது என்று தமிழ் மக்கள் நடுங்கும் அளவுக்கு பின்னாளில் இங்கு அமைந்திருந்த சோதனைச் சாவடிகள் திகிலூட்டுவனவாக அமைந்திருந்தன. சந்தேகத்தின்பேரில்கைதுசெய்யப்படுபவர்கள் இங்கு கொடும் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டனர் என்பதும், பின்னர் இக்கோட்டை விடுதலைப்புலிகள் வசமாகி நிர்மூலமாக்கப்பட்டதும் வரலாறு.

ஆனையிறவு இவ்வளவு இடவமைவு காரணமாக முக்கியத்துவம் பெற்றிருக்கும் அதேநேரத்தில் இங்கு விளையும் உப்புக்கு முதல்தரமான உப்பு என்ற பெருமையையும் தேடிக்கொடுத்திருக்கிறது. ஆனால், இவற்றையெல்லாம் புறந்தள்ளி மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடாக 'றஜலுனு' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. உப்பில்லாப் பண்டம் மட்டுமல்ல, அது 'றஜலுனு' உப்பாக இருந்தால் தமிழ் மக்களின் மனோவுணர்வில் அதுவும் குப்பையில்தான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டன் விதித்த தடை தொடர்பில் அது நடந்துகொண்ட விதத்தைப் பார்க்கின்றபோது தெளிவாகத் தெரிகின்றது என்று ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியா, வைரவபுளியங்குளம்பகுதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனிதவுரிமைமீறலில் ஈடுபட்டதாக நான்கு பேருக்கு பிரித்தானியா தடை விதித்துள்ளது. இதனை நாம் முதலில் வரவேற்கின்றோம். இதில் வினோதம் என்னவென்றால், தற்போதைய ஆளும்தரப்பு உட்பட தெற்கில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றாக நின்று இவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கின்றன.

தமிழ் மக்களின் இனப் பிரச்சனை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு ஜேவிபி தொடக்கத்திலிருந்தே ஆதரவு கொடுக்கவில்லை. இப்பொழுது நான்கு பேருக்குதடைவிதித்ததை வைத்துக்கொண்டு அமைச்சர்கள்அனைவரும்கூக்குரல்போடுவது இனவாதத்தின் அடிப்படையிலேயே இந்த ஆளும்தரப்பும் செயற்படுவதை தொட்டத் தெளிவாக காட்டுக்கின்றது.

சிங்களதேசத்தில் ஒருவருக்கு பிரச்சனை என்றால் அங்குள்ள ஆட்சியாளர்கள், கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டு அதற்கு எதிராக குரல் கொடுக்கின்றன. இதனை வரலாறு முழுவதும் காணலாம். ஆனால் தமிழர்கள் எங்களுக்குள் ஒற்றுமையீனத்தையே வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றோம்.

எங்களது போரராட்டங்களும் ஒருமித்த போராட்டமாக நடைபெறுவதில்லை. தமிழ் மக்கள் அனைவரும் இந்தத் தடைகளை ஆதரிக்கவேண்டும். மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு சர்வதேச நீதமன்றத்தின் மூலம் நீதி வருவதற்கு நாம் அதனைச் செயற்படுத்த வேண்டும். நாங்கள் ஒற்றுமையாக இல்லை என்றால் தென்னிலங்கையில் உள்ளவர்கள் ஒற்றுமையாக இருந்து எம்மை அழிக்கின்ற செயற்பாட்டை முன்னெடுப்பார்கள்.

இந்த விடயத்தில் புதிய ஆளும்தரப்புக்கூட போராட்ட இயக்கம் என்கின்ற நிலையிலிருந்து மாறி ஒரு இனவாத தரப்பாகச் செயற்படக்கூடிய நிலையேஉள்ளது. எம்மைப்பொறுத்தவரையில் பிரித்தனியா இன்று தடை விதிப்பதற்கு எடுத்த நிலைப்பாடு போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச நீதிமன்றம் விசாரணைவரை செல்லவேண்டும். அதன் மூலம் நீதி கிடைக்கவேண்டும்.

எங்களுக்குள் இருக்கும் பகைமைகளை மறந்து எங்களுக்காக மரித்த மக்கள், போராளிகள் அனைவருக்குமாக, தொடர்ந்தும் தமிழர்பகுதிகளில்இடம்பெறும்புத்தமயமாக்கல், நில அபகரிப்பு, அரச அடக்கு முறைகளுக்கு எதிராக ஓரணியாகச் செயற்பட வேண்டும்.

புதிதாக வந்த ஆளும்தரப்பு அரசியல் கைதிகளை விடுவிப்புத் தொடர்பில் முதலில் அரசியல் கைதிகளே இல்லை எனக் கூறினார்கள். தற்போது அரசியல் கைதிகள் விடுதலை செய்வதற்கு நாட்கள் செல்லும் எனக் கூறியுள்ளார்கள். ஆகவே, அரசியல் கைதிகள் இருக்கிறார்கள் என்பதை இந்த அரசு ஒத்துக் கொண்டுள்ளது. தேர்தல் நெருங்கும் நிலையில் அரசியல் கைதிகள் தொடர்பில் பேசுவதை கவனத்தில் கொள்ளவேண்டும். தேர்தல் காலங்களில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் நடைபெறுகிறது. என்ன வேலைத்திட்டங்களைச்செய்யப்போகின்றோம் எனக் கூறகிறார்கள்.

நாடாளுமன்றத்தில் கூடுதலான ஆசனங்களை பெற எவ்வாறு செயற்பாட்டார்களோ அதேபோல் வடக்கு, கிழக்கில் பல சபைகளை கைப்பற்றும் நோக்கோடு செயற்படுகிறார்கள் என தெரிகிறது எனத் தெரிவித்தார்.

## குரல்கொடுப்பதை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சிவில் அமைப்பினர் கொழும்பில் நேற்று நடத்திய போராட்டத்தின்போது செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இஸ்ரேல் இராணுவத்தின் குண்டு தாக்குதலில் இதுவரை 50 ஆயிரம் பலஸ்தீனவர்கள் வரையில் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 20 ஆயிரம் பேர் சிறுவர்கள். இந்த வேதனையை தாங்கிக்கொள்ள முடியாதவர்கள் மனிதாபிமானத்துக்காக பல்வேறு வகையில் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். அந்த வகையில் தற்போது ஸ்டிகர் ஒட்டியமைக்காக கைதுசெய்யப்பட்டிருக்கும் இளைஞனும் தனது மன வேதனையையே ஸ்டிகர் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார். அது எந்த வகையில் தவறு?

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இஸ்ரேல் பக்கம்தான் இருப்பது என்றால் அதனை வெளிப்படையாகக் கூறட்டும். அப்போது பிரச்சினை முடியும். அதன் பின்னர் நாங்கள் உங்களைப் பற்றிப் பேசமாட்டோம். பலஸ்தீன் தொடர்பில் இந்த ஆளும்தரப்பின் இரட்டை வேடம் தற்போது வெளிப்பட்டுள்ளது. ஆளும்தரப்பு ஏன் இஸ்ரேலுக்கு இந்தளவு அச்சப்படுகிறது?

இஸ்ரேலுக்கு எதிராக உலக மக்கள் இன்று வீதிக்கு இறங்கியுள்ளனர். மனித குலத்துக்கு எதிராக இஸ்ரேல் நடத்தும் இன அழிப்புக்கு எதிராகமக்கள்அணிதிரண்டுள்ளனர். அதனால் கைதுசெய்யப்பட்டிருக்கும் இளைஞன் தொடர்பில்பாதுகாப்புஅமைச்சர்என்றவகையில் ஜனாதிபதி பதில் சொல்லவேண்டும். இதில் இருந்து தப்பிச்செல்ல முடியாது.

ஜனாதிபதியின் ஆளும்தரப்பு பலஸ்தீனுக்காக முன்னிற்பதாக தெரிவிக்கிறது. ஆனால் அவர்களின் பொலிஸார் பலஸ்தீனர்களுக்காக செயற்படுபவர்களை அடக்குவதற்குதொடர்ந்துசெயற்பட்டுவருகிறது.

இஸ்ரேலுக்கு எதிராக நாங்கள் நாடு முழுவதும் தொடர்ந்தும் ஸ்டிகர் ஒட்டுவோம். சுவரொட்டிகளையும் ஒட்டுவோம். அநுரகுமாரவின் ஆளும்தரப்பினர் முடிந்தால்

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

காலைக்கதிர் Kalaikkathir

# அநீதியாகக் கொலைசெய்யப்பட்டோருக்கு தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் நீதி கிட்டும்

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அநீதியாக கொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் என கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போது பலர் கைது செய்யப்படுகிறார்கள். குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் நிரூபிக்கப்படும் வரை அவர் சந்தேக நபரே. அவர்களுக்கு பிணை வழங்குவது என்பது சாதாரண நடைமுறை. அவர்கள் பிணையில் சென்றாலும் கூட வழக்குகள் தொடர்ந்து நடைபெற்று அவர்களுக்கான தீர்ப்புக்கள் வழங்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கான



தண்டனைகள் கிடைக்கும்.

அப்போது அவர்கள் தண்டனையை அனுபவித்தே ஆக வேண்டும். பிணை என்பது பல வழக்குகளில் சாதாரண விடயம். வழக்குகளில் போதிய சாட்சியங்களை பெற்றே விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம். ஆகையால் தண்டனை நிச்சயமாக கிடைக்கும். இதில் அரசாங்காம் உறுதியாக உள்ளது.

பட்டலந்த வதை முகாம் என்பது மக்களால் துன்பியல் சம்பவமாக கருதுப்பட்ட விடயம். ஆனால் விசாரணைகள் என்பது கடந்த காலங்களில் எந்த அரசாங்கத்தாலும் மேற்கொள்ளப்படவில்லை. அது உண்மையில் துப்பாக்கியமான ஒரு நிலைமை.

அதேநேரம், எங்களுடைய அரசாங்கம் அநீதியாக கொலைசெய்யப்பட்டவர்கள்,பட்டலந்தசித்திரவதை முகாம் ஊடாக சித்திரவதை செய்யப்பட்டு மனிதத்திற்கு அப்பால் சென்று மிருகத்தனமாக கொலைசெய்யப்பட்டவர்களுக்குரியவிசாரணைகள் இடம்பெறும். அது தொடர்பான அனைவருக்கும் தண்டனை வழங்கப்படும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் நிச்சயமாக கிடைக்கும் என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம் எனத் தெரிவித்தார். 100

# தந்தை செல்வாவின் 127ஆவது பிறந்தநாள் கிளிநொச்சியில்

## தந்தை செல்வா – 127 ஆவது பிறந்த நாள் நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்றது .

வடமாகாண ஆளுநரும் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் அறங்காவலருமான நாகலிங்கம் வேதநாயகம் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் முன்னாள் யாழ் இந்தியத்துணைத்துதுவர் ஆ.நடராஜன் , நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி ,கலாநிதி இராமசாமி ரமேஸ் (சிரேஷ்ட அரசறிவியல் விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்)

சட்டத்தரணி , ஜனாப் முஜிபுர் ரஹ்மான் ,சட்டத்தரணி புராதனி சிவலிங்கம் என பலர் கலந்து கொண்டனர்.

சிறப்பு உரைகளை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகம், பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட அரசறிவியல் விரிவுரையாளர் கலாநிதி இராமசாமி ரமேஸ், சட்டத்தரணி புராதனி சிவலிங்கம், சட்டத்தரணி ஜனாப் முஜிபுர் ரஹ்மான், முன்னாள் யாழ். இந்தியத்துணைத்துதுவர் ஆ.நடராஜன் ஆகியோர் நிகழ்த்தினர். 113









# சட்டவிரோத பனை மரம் தறிப்புக்கான தண்டனையை அதிகரிக்க நடவடிக்கை

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் சகாதேவன் தெரிவிப்பு

(சுபேசன்)

வடக்குமாகாணத்தில் சட்டவிரோதமாக பனை வளம் அழிக்கும் செயற்பாடு அதிகமாக இடம்பெற்ற குற்றத்திற்கான தண்டப்பணம் மற்றும் தண்டனை ஆகியன குறைந்த அளவில் இருப்பதே பிரதான காரணமாகக் காணப்படுகின்றது என பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.



அண்மையில் பளை - இயக்கச்சிப் பகுதியில் அதிகளவான பனை மரங்கள் தறித்து அழிக்கப்பட்ட நிலையிலேயே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

சட்டவிரோதமாக பனை மரங்களை அழிக்கும்குற்றச்செயல்களுக்கானதண்டனை மற்றும் தண்டப் பணத்தை அதிகரிக்க பனை அபிவிருத்திச்சபையினுடைய பணிப்பாளர்சபைக் கூட்டத்தில் தீர்க்கமான முடிவுஎடுக்கப்பட்டுபனை வளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம்.

பனை வளத்தை தறிப்பதை தடுப்பது மாத்திரம் எமது இலக்கு அல்ல பனை வளத்தைப் பேணுபவர்களுக்கு அதன் மூலமாக வருமானத்தைப் பெருக்க நடவடிக்கை எடுப்பதும்எமதுநோக்காகக் காணப்படுகின்றது.

பனைவளத்தை மக்கள் தாமாக விரும்பிப் பாதுகாக்கும் சூழல் ஏற்படுவதே உண்மையான பனை வள அபிவிருத்தியாக அமையும்.

வெறுமனே சட்டங்க ளாலும், அதிகார பிரயோகங்களாலும் பனை வளத்தைப் பாதுகாக்க முடியாது என்பதனை பனை அபிவி ருத்திச்சபை உணர்ந்துள்ளது.

பனை வளத்தைப் பனை அபிவிருத்திச் சபையால் மாத்திரம் பாதுகாக்க முடியாது. மக்களுடைய ஒத்துழைப்பும் கிடைத்தால் தான் அது சாத்தியமாகும்.என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு லஞ்சம் வழங்க முற்பட்ட நபர் கைது

கிளிநொச்சி மாவட்டத்தின் தர்மபுரம் பொலீஸ் நிலையத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வெளிநாட்டுப் பிரஜை லண்டனில் இருந்து வந்தவர் ஒருவர் குடும்பப் பிணக்கு தொடர்பாக தன்னை அந்த வழக்கில் இருந்துவிடுவிக்குமாறு கோரி தர்மபுர பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க அவர்களுக்கு தர்மபுர பொலீஸ் நிலைய அலுவலகத்திற்குள் வைத்து 50000 ரூபா பணத்தினை லஞ்சமாகவழங்க முற்பட்ட வேலை சந்தேக நபர் தர்மபுர போலீஸ் நிலைய பொறுப்பாதிகாரியால் கைது செய்யப்பட்டுள்ளார்.



கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் அன்றைய தினமே கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாக தர்மபுர பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். 316

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## குருதியில் கலந்துள்ள குரூரம்

ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பிற்கு சிங்களத்தில் பெயரிடப்பட்டுள்ளமை பலத்த கண்டனங்களை தமிழ் மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது. அந்த உப்பிற்கு ஆனையிறவு உப்பு என்று தமிழ் பெயரை வையுங்கள் என்று தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் அமைச்சர் அமைச்சரிடம் பகிரங்கக் கோரிக்கை விடுத்திருந்தார். அதற்குப் பதிலளித்திருந்த ஆளும்தரப்பு தமிழ் அமைச்சர்களில் ஒருவரான சந்திரசேகரன், உப்பின் விற்பனைப் பெயர் தமிழில் மாற்றப்பட்டு உலகம் முழுவதும் விநியோகிக்கப்படும் என்றார். உப்பிற்குச் சிங்களப் பெயர் வைக்கப்பட்டதற்கு தமது ஆளும்தரப்பு காரணமல்ல, அது முந்தைய ஆளும்தரப்பினரால் வைக்கப்பட்ட பெயர் என்றும் சமாளித்தார். உடனடியாகப் பெயரை மாற்ற முடியாது என்பதால் வரும் காலத்தில் அதனை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இவை அனைத்துமே ஒரு செய்தியை மிகத் தெளிவாகத் தெரிவிக்கின்றன. இன்றைய ஆளும்தரப்பினதும் குருதி நாளங்களில் ஊறிப் போயிருக்கும் பேரினவாதச் சிந்தனை இன்னும் கலையவில்லை என்பதுதான் அந்தச் செய்தி. ஆனையிறவு உள்ளிட்ட எந்தவொரு பகுதியும் இலங்கையின் ஒரு பகுதி ஆகவே எங்கு உற்பத்தி செய்யப்பட்டாலும் அரசு சார் நிறுவனங்களின் உற்பத்திகளாக இருந்தால் அவற்றுக்குச் சிங்களப் பெயர்களையே இடவேண்டும் என்று ஊறிப்போன சிந்தனையின் வெளிப்பாடே இது.

அமைச்சர் சந்திரசேகரனின் கருத்து இன்றைய ஆளும்தரப்பினருக்குள்ளு இந்த சிந்தனை அவர்கள் அறிந்தோ அறியாமலோ நன்கு ஊறிப்போயுள்ளதையே தெளிவுபடுத்துக்கின்றது. அமைச்சர் கூறுவதைப் போன்று முன்னைய ஆட்சிக்காலத்தில் ஆனையிறவு உற்பத்திக்காக முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளின் பயனாக மட்டும் அங்கு சிங்களப் பெயர் இடப்படவில்லை. இலங்கை, தமிழ், முஸ்லிம் மக்களினதும் தாயகம், இங்கு தமிழ், முஸ்லிம் பெயர்களிலும் பொருட்கள் பெயரிடப்படலாம், அரச திட்டங்களுக்குப் பெயரிடப்படலாம் என்ற ஆளும்தரப்புக்கள் ஒருபோதும் சிந்திப்பதில்லை என்பதன் வெளிப்பாடே இது.

ஆனையிறவு உப்பளத்தை தனியாரிடம் விற்பதற்குத்தான் ரணில் ஆட்சியில் மும்முரமாகக் காய்கள் நகர்த்தப்பட்டு வந்தன. தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பின்னர்தான் அதனை அரசே இயக்குவது என்கிற முடிவு எடுக்கப்பட்டது. அப்படிப்பட்ட நிலையில் ஆனையிறவு உற்பத்திக்கு சிங்களப் பெயரிட்டமைக்கு முன்னைய ஆட்சியாளர்களின் திட்டம் காரணம் என்கிற அமைச்சர் சந்திரசேகரனின் கருத்து முற்றிலும் பொருத்தமான ஒன்றாகத் தெரியவில்லை. முன்னைய ஆட்சிக்காலத்தில் இது தொடர்பான திட்டங்கள் இருந்திருந்தாலும், அதனை இறுதி செய்து உற்பத்தியைத் தொடங்குவதற்கு முன்பாக இலங்கை அனைவருக்கமானது என்பது பொறுப்பு வாய்ந்த அமைச்சருக்கோ ஆளும்தரப்பினருக்கோ நினைவில் நின்றிருந்தால் உப்பிற்குப் தமிழ்ப் பெயர் கிட்டியிருக்கும். தமிழ் பெயர் இல்லையென்றாலும் அந்த இடப்பெயராவது கிடைத்திருக்கும். ஆனால், ஆளும்தரப்பினரின் குருதியிலேயே அந்தச் சிந்தனைக் கலப்பு இல்லாத காரணத்தால் தவறு நிகழ்ந்து அது சுட்டிக்காட்டப்படும் வரை அது அவர்களுக்கு உறைக்கவில்லை.

சுட்டிக்காட்டப்பட்டதும் மற்றவர்கள் மீது பழியைச் சுமத்திவிட்டு, சமாளிக்கப் பார்க்கிறார்கள். இத்தகைய அடிப்படைக் குணாம்சத்தை மாற்றாமல் யாராலும் இலங்கையை மாற்றிவிடமுடியாது. அரசுத் தலைவரும் ஆளும்தரப்பினரும் பேசும் இலங்கையின் முறைமை மாற்றத்திற்கு அடிப்படையானது இந்த மாற்றம். இன நல்லிணக்கத்திற்கும் அரசியல் தீர்வுக்கும்கூட இது மிக அத்தியாவசியமானது. இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளாதவரையும், தங்களின் குருதியில் உறைந்துள்ள இனவாத கறையை அகற்ற முற்படாத வரையிலும் இந்த ஆட்சியாளர்களாலும் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிடமுடியாது என்பதே நிதர்சனம்.




# சோவியத் கால டிரம்பின் நெருங்கிய உறவு ரஷ்ய நட்பின் அவசியமும் அவசரமும் ஏன்?

**“(அமெரிக்க அதிபர் டிரம்பின் ரஷ்யாவுடனான - குறிப்பாக சோவியத் கால முன்னைய நெருங்கிய நட்புறவு குறித்து பல்வேறு விமர்சனங்களும், வாதப் பிரதிவாதங்களும் மேற்குலக நாடுகளில் முன்வைக்கப்படுகின்றன. இந்நிலையில் அதிபர் டிரம்பின் சோவியத் - ரஷ்ய உறவுகள் பற்றிய பார்வையை அந்த ஆக்கம் அலசுகிறது) ”**

ஐங்கரன் விக்கினேஸ்வரா

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் ரஷ்யாவுடனான முன்னைய உறவுகள் பற்றி பல்வேறு தகவல்களும், விவாதங்களும் மேற்குலக ஊடகங்களில் தொடர்ந்து வெளிவந்த வண்ணம் உள்ளன. குறிப்பாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினை விமர்சிக்க அவர் தொடர்ந்து மறுப்பது குறித்து அமெரிக்க ஊடகங்களும் பாரியவிமர்சனங்களைமுன்வைத்து வருகின்றன.

இந்நிலையில் ரஷ்ய அரசுடனும், முன்னையதொழில்அதிபர்களுடன் நெருக்கமான தொடர்பில் டிரம்ப் இருந்ததாக பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

உக்ரைனிய போரில் டிரம்பின் நிலைப்பாடு ஐரோப்பிய நாடுகளுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ரஷ்யா சார்பான நிலைப்பாடு மட்டுமின்றி, இந்த போருக்கு உக்ரைனே காரணம் எனும் டிரம்பின் குற்றச்சாட்டு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனாலேயே டிரம்பின் ரஷ்யாவுடனான முன்னைய நட்புறவு குறித்து பல்வேறு விமர்சனங்களும், வாதப் பிரதிவாதங்களும் முன்வைக்கப்படுகின்றன. இந்நிலையில் அதிபர் டிரம்பின் ரஷ்ய உறவுகள் பற்றிய பார்வையை அந்த ஆக்கம் அலசுகிறது.

### ரஷ்யாவுடன் நெருக்கமான டிரம்ப்:

1990க்கு பிற்பட்ட காலங்களில் டிரம்ப் பாரிய பொருளாதார நெருக்கடி நிலைகளை எதிர்கொண்டதால், அவர் ரஷ்யா மற்றும் முன்னாள் சோவியத் நாடுகளுடன் தொடர்புடைய செல்வந்தர்களிடம் இருந்து நிதியுதவியை அதிகளவில் நம்பியிருந்தார்.

அவரது மகன்களான டொனால்ட் ஜூனியர் மற்றும் டிரம்ப் எரிக் ஆகியோர் இதை வலுப்படுத்தும் வகையில் தங்கள் ஆதாரங்களை வெளியிட்டுள்ளனர். டொனால்ட் ஜூனியர் 2008 இல், ரஷ்யர்கள் எங்கள் சொத்துக்களில் பெரும்பகுதியை உருவாக்குகிறார்கள் என்றும் கூறினார்.

மேலும் எரிக் 2014 இல், ரஷ்யாவிலிருந்து எங்களுக்குத் தேவையான அனைத்து நிதியும் எங்களுக்கு கிடைத்தது என்றும் கூறினார்.

அமெரிக்க தேர்தலில் டிரம்பை ஆதரிக்கும் 2016 பிரச்சார நடவடிக்கைக்கு புட்டின் தனிப்பட்ட முறையில் ஒப்புதல் அளித்ததாகவும் 2021 இல் தி கார்டியன் பத்திரிகை வெளியிட்ட ‘கசிந்த கிரெம்ளின் ஆவணங்கள்’ தெளிவான தகவல்களை வழங்கியுள்ளன.


A real-estate mogul surveys Russia: *Developer and wife on the town in Leningrad*

**Trump Lands in Red Square**

The Soviets want him to build two luxury hotels

Real-estate mogul Donald J. Trump stepped onto the circular balcony in his sumptuous corner suite at Moscow's National Hotel—and criticized the door. "This I can't understand," he said, pointing to layer upon layer of crusted brown paint. "But this," he said, making a sweeping gesture at the unsurpassed view of the Kremlin, "is fabulous."

building a Russian version. Soviet officials visited Trump in New York, inviting him on the all-expenses-paid trip. Trump saw a half-dozen sites in Moscow alone. The deal is far from done. Inveterate bargain hunter Trump might have met his match in the Soviets, who retain 51 percent ownership of all joint ventures. "I like to have control, to put it mildly," says Trump. Still, the idea

### டிரம்ப் ரஷ்ய உளவாளியா ?

சோவியத் காலத்தில் தீவிரமாக செயல்பட்டு வந்த கேஜிபி உளவு அமைப்பில் டிரம்ப் சேர்க்கப்பட்டிருந்தார் என்றும், இன்றும் அவரது செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் இருப்பதாக மேற்குலக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சமீப காலமாக ரஷ்யாவுடன் டிரம்ப் அதீதமாக நெருக்கம் காட்டி வருகிறார். இந்த நெருக்கம் அமெரிக்க மக்களிடையே பல கேள்விகளை எழுப்பியிருக்கிறது. இப்படி இருக்கையில், டிரம்ப் ஒரு உளவாளி என்று வெளியாகியுள்ள தகவல்கள் கவனம் பெற்றிருக்கின்றன.

கேஜிபி அமைப்பில் ஆறாவது பணியகத்தில் பணியாற்றிய, முன்னாள் கஜகஸ்தான் உளவுத்துறைத் தலைவரான அல்னூர் முசாயே, டிரம்ப் குறித்து கூறியுள்ள தகவல்கள் பல விவாதங்களை கிளப்பியுள்ளன.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# சோவியத்...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

1987ம் ஆண்டு டிரம்ப் சோவியத் ரஷ்யாவுக்கு சென்றிருந்தார். அப்போது கேஜிபியில் அவர் சேர்க்கப்பட்டார். டிரம்ப்புக்கு ’க்ராஸ்னோவ்’ என்று ரகசிய பெயரும் கூட வைக்கப்பட்டது என்றும் கூறப்பட்டது.




பொதுவாக சாதாரண நபர்களைதான் உளவு வேலைக்கு சோவியத் ரஷ்யா பயன்படுத்தி வந்தது. ஆனால், ஒரு கட்டத்தில் தனது ஆட்சேர்ப்பு நடவடிக்கையை மாற்ற தொடங்கியது. அதன்படி அமெரிக்க தொழிலதிபர்கள் குறி வைக்கப்பட்டனர். அப்படித்தான் டிரம்ப்பும் இந்த அமைப்பில் சேர்க்கப்பட்டார்எனசிலஊடகங்கள்தெரிவிக்கின்றன.

ஆயினும் இத்தகவல்களை ரஷ்யவோ அல்லது அமெரிக்காவோ உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தவில்லை. இருப்பினும் டிரம்ப் இந்த குற்றச்சாட்டை கடுமையாக மறுத்திருக்கிறார். இதுபோன்றதகவல்கள் அபத்தமானது, போலியானது, எனக்கும் ரஷ்ய உளவுத்துறைக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று டிரம்ப் கூறியுள்ளார்.

## 1980களில் ரஷ்ய தொடர்பு:

1980களில் ரஷ்யர்களால் டிரம்ப் முதன்முதலில் தொடர்பு செய்யப்பட்டார். 1984 ஆம் ஆண்டில், ரஷ்ய மாபியா பணமாற்றம் செய்ய டிரம்ப் ரியல் எஸ்டேட்டைப் பயன்படுத்தத் தொடங்கியது. ஆனால் அது பல தசாப்தங்களாக தொடர்ந்தது.

1987 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபைக்கான சோவியத் தூதர் யூரி டுபினின், டிரம்ப் மற்றும் டிரம்பின் அப்போதைய மனைவி இவானா ஆகியோர் சாத்தியமான வணிக வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு மாஸ்கோவிற்கு ஒரு பயணத்தை ஏற்பாடு செய்தார்.

அந்தப் பயணத்திற்கு ஏழு வாரங்களுக்குப் பிறகு, டிரம்ப் பனிப்போருக்குப் பிந்தைய மேற்கத்திய வெளியுறவுக் கொள்கை கூட்டணியை முறித்துக் கொள்ள அழைப்பு விடுத்து பாஸ்டன் குளோப், நியூயோர்க் டைம்ஸ் மற்றும் வாசிங்டன் போஸ்ட் ஆகியவற்றில் முழு பக்க விளம்பரங்களை வெளியிட்டார்.

இதன் மூலம் முழுமையாக டிரம்ப் - ரஷ்ய தொடர்பும் டிரம்பின் ரியல் எஸ்டேட் மூலம் ரஷ்யாவிற்கு பணமாற்றத்தை செய்வதாகத் தொடங்கியது. ஆனால் இத்தொகை மிகப் பெரிய பண மாற்றமாக ஒன்றாக உருவானது.

பின்னர் 1984 ஆம் ஆண்டில், டேவிட் போகடின் - ஒரு ரஷ்ய பெட்ரோல் வியாபாரி மற்றும் ஒரு முக்கிய ரஷ்ய வர்த்தக தலைவரான செமியன் மொகிலெவிச்சின் நெருங்கிய கூட்டாளியும் அமெரிக்காவில்டிரம்ப்டவர்திறக்கப்பட்ட உடனேயே டிரம்பை சந்தித்தனர். அந்த சந்திப்பில் போகாடின் டிரம்பிடமிருந்து ஐந்து பெரிய குடியிருப்பக்களை வாங்கினார். ஆனால் அந்த வீடுகளை அமெரிக்க அரசாங்கம் பின்னர் பறிமுதல் செய்தது.

அவை ரஷ்யாவிற்கு பணத்தை மோசடி செய்ய பயன்படுத்தப்பட்டதாகக் நியூயோர்க் டைம்ஸ், ஏப்ரல் 30, 1992 இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் பிறந்த பெலிக்ஸ் சேட்டர் நீண்ட கால ரஷ்ய தொடர்புள்ளவர். டிரம்ப் டவரின் 24வது மாடியில் அமைந்துள்ள ரியல் எஸ்டேட் கூட்டு நிறுவனமான பேராக் குரூப் எல்எல்சியின் முன்னாள் நிர்வாக இயக்குனராக இருந்தவர்.

அவர் ஒரு குற்றவாளி, பின்னர் எஃப்.பி.ஐ மற்றும் பிற நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பாளராக ஆனார். அவர் டிரம்பின் முன்னாள் ‘பிக்சர்‘ வழக்கறிஞரான மைக்கேல் கோஹனுடன் தொடர்பு கொண்டிருந்தார். கோஹனின் குடும்பம் எல் கரிபேவைச் சொந்தமாக்கியது. இது புரூக்ளினில் உள்ள ரஷ்ய மாபியாவின் மொடர்பில் இருந்தது. கோஹன் தனது மாமியார் மற்றும் அவரது மைத்துனர் மூலம் உக்ரேனிய வர்த்தக குழுக்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்.

அதேவேளை பெலிக்ஸ் சேட்டரின் தந்தைக்கு ரஷ்யாவுடன் நீண்டகால தொடர்பு இருந்தது. இது 30 ஆண்டுகளுக்கும் மேலானதாக இருந்தது.

## டிரம்ப் அட்லாண்டிக் கசினோ வங்குரோத்து :

டிரம்பின் அட்லாண்டிக் நகர கேசினோக்கள் 1980களில் வங்குரோத்தான பிறகு 4 பில்லியன் டாலர் கடனில் இருந்தார். எந்த அமெரிக்க வங்கியும் அவரை பாதுகாக்க வரவில்லை. பின்னர் வெளிநாட்டு பணம் பேராக் வழியாக வரத் தொடங்கியது. பேராக் இரண்டு முதலீட்டாளர்களால் நடத்தப்பட்டது.

முன்னாள் சோவியத் குடியரசில் இருந்து அடிப்படை ஆதாரங்களைப் பயன்படுத்தி வந்த கஜகஸ்தானில் பிறந்த முன்னாள் சோவியத் அதிகாரி டெவ்ஃபிக் ஆரிஃப், மற்றும் 1990களில் ரஷ்ய மாஃபியாவை உள்ளடக்கிய ஒரு பெரிய பங்கு மோசடி திட்டத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்ட ரஷ்யாவில் பிறந்த தொழிலதிபர் பெலிக்ஸ் சேட்டர் ஆவார்.

பேராக் 2005 இல் டிரம்புடன் கூட்டு சேர்ந்து, தனது பெயர் மற்றும் சொத்து மேலாண்மைக்கு உரிமம் வழங்கும் சட்டப்பூர்வ போர்வையில் டிரம்ப் அமைப்பில் பணத்தை முதலீடு செய்தார்.

இதேவேளை செமியன் மொகிலெவிச் ரஷ்ய மாஃபியாவின் மூளையாக செயல்பட்டார். மொகிலெவிச் செயல்பாட்டாளர்கள் பல தசாப்தங்களாக டிரம்ப் ரியல் எஸ்டேட்டைப் பயன்படுத்தி கருப்புப் பணத்தை மோசடி செய்து வந்தனர்.

அதாவது ரஷ்ய மாபியா செயல்பாட்டாளர்கள் பல ஆண்டுகளாக அவரது செல்வத்தின் ஒரு பகுதியை பயன்படுத்தி வந்தனர். அவர்களில் பலர் டிரம்ப் டவர்ஸ் மற்றும் பிற சொத்துக்களில் முதலீடு செய்தனர்.

அத்துடன் அவர்கள் டிரம்பின் கிரீட் திட்டத்தில் இருந்து தங்கள் செயல்பாடுகளை நடத்துகிறார்கள்.

பெரும்பாலும்கவனிக்கப்படாதமிகமுக்கியமான விஷயங்களில் ஒன்று, ரஷ்ய மாபியா பரந்தளவில் உலகம் முழுவதும் சக்திவாய்ந்த அமைப்பாக உள்ளது எனவும், குறிப்பாக மேற்குலக ஊடகங்கள் ரஷ்ய உளவுத்துறையின் ஒரு பகுதியே ரஷ்ய மாபியா என்றும் முத்திரை குத்தியுள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் அரசுக் கட்சியின் காரைதீவு கிளையின் வேட்பாளர் அறிமுகம்




இலங்கை தமிழரசுக்கட்சியின் காரைதீவு கிளை தலைமையிலான பிரதேச சபை வேட்பாளர் அறிமுக நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை விவேகானந்தா விளையாட்டுக் கழக மண்டபத்தில் நடைபெற்றது.

மேலும், இந்நிகழ்வுக்கு விஷேட அதிதிகளாக இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கவீந்திரன் கோடீஸ்வரன், இராசமாணிக்கம் சாணக்கியன், ஞா.ஸ்ரீநேசன், சி.ஸ்ரீநாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.




மேற்படி நிகழ்வு காரைதீவு இலங்கை தமிழரசு கட்சி கிளை செயலாளர் கதிர்காமத்தம்பி செல்வபிரகாஷ் தலைமை தாங்கியது டன் இலங்கை தமிழரசுக் கட்சி காரைதீவு பிரதேச சபை வேட்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில்பெருந்தொகையான ஆதரவாளர்களும் வருகை தந்திருந்தனர்.

# ரூ. 18 மில்லியன் பெறுமதியான கஞ்சா மன்னாரில் பொலிஸாரிடம் சிக்கியது

தலைமன்னார் ஊர்மனை பகுதியில் உள்ள காட்டு பகுதியில் 18 மில்லியன் ரூபா மதிப்புள்ள கேரள கஞ்சா பொதிகள் சனிக்கிழமை மன்னார் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மன்னார் இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினருடன் இணைந்து தலைமன்னார் பகுதியில் நடத்தப்பட்ட சிறப்பு சோதனையில் தலைமன்னார் ஊர்மனை பகுதியில் கேரள கஞ்சா பொதிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

18 மில்லியன் ரூபா மதிப்புள்ள 85 கிலோ 200 கிராம் கேரள கஞ்சா பொதிகள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன என மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இந்த கேரள கஞ்சா இந்தியாவிலிருந்து



கடல் வழியாக அந்த இடத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா பொதிகள் மேலதிக விசாரணைக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

JOB VACANCY

1. Full Time Job
REQUIRED POSITIONS:
·Advertisement collector – 2
·Marketing Head – 1
·Receptionist – 2
SALARY - ON INTERVIEW.

2. மண்டதீவில் உள்ள சுற்றுலா தலம் ஒன்றிற்கு இரண்டு வேலையாள் தேவை

தங்கியிருந்து வேலை செய்வது விரும்பத்தக்கது.
சம்பளம் - நேர்காணலில், பேசி தீர்மானிக்கலாம்

SEND YOUR CV TO :
hr.goodgift@gmail.com

More Details
0775551442



# கிறிஸ்தவ அமைப்பினால் பொருள்கள் அன்பளிப்பு



புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ அமைப்பின் ஆயர் ஜெரோம் பெர்னாண்டோவின் வழிகாட்டலில் இயங்கும் அவரது சமூக நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா அவர்களின் சமூக மேம்பாட்டுக்கான செயற்பாடுகளுக்காக சுமார் இரண்டு லட்சம் ரூபாய் பெறுமதியான இலத்திரணியல் சாதனங்கள் அவரிடம் அமைப்பின் அங்கத்தவர்கள் அருட்தந்தை நிஷான் குரே, ஜெரோம் பெர்னாண்டோ நலன்புரி அமைப்பின் சார்பாக கையளிப்பதை காணலாம்.

# அஸ் ஸிராஜ் அஹதிய்யா பாடசாலை பரிசளிப்பு

(ஹாரீஸ்)

அஸ் ஸிராஜ் அஹதிய்யா பாடசாலையினூடாக ரமழான் 06 தொடக்கம் 26 வரையான காலப்பகுதியில் இடம் பெற்று வந்த ரமழான் ஆன்மீக கற்கைநெறியின் பரிசளிப்பு விழா முதலாம் வட்டாரம் நூராணியா ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் கடந்த 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அஹதிய்யா பாடசாலையின் அதிபர் ஏஜே. எம். ஹில்வான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சுமார் 30 மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பணப்பரிசல்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ரமழான் மாதத்தில் இடம்பெற்ற இக்கற்கைநெறியில் 15 ஆண் மாணவர்களும் 15 பெண் மாணவிகளும் பங்கு பற்றியிருந்தனர். ஆண் மாணவர்களுக்கு அஷ்ஷேஹ். அபூ உவைத் முகம்மது சஹீர் (காஸிபி) மற்றும் பெண் மாணவிகளுக்கு அஷ்ஷேஹா அப்துல் ஹலீம் அஸ்கானி (ஹுதாயீயா) ஆகியோர் கற்பித்திருந்தார்கள்.

இரு பிரிவுகளாக இடம் பெற்ற இந்நிகழ்வில் முதலாம் இடம் பெற்ற மாணவர்களுக்கு ரூபா 3000 உம், இரண்டாம் இடம் பெற்ற மாணவர்களுக்கு ரூபா 2000 உம், மூன்றாம் இடம் பெற்ற மாணவர்களுக்கு ரூபா 1000 உம், ஆறுதல் பரிசாக 500 ரூபாயும் வழங்கப்பட்டன. மேலும் பங்கு பற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் நிகழ்வை சிறப்பாக நடத்தி முடிப்பதற்கு பங்காற்றிய ஆஜுடி.எஸ். சாளம்பைக் கேணி - 03, மத்திய முகாம் வர்த்தகர்கள் சிலர் , வெளிநாட்டில் தொழில் புரிகின்ற தனவந்தர்கள், சாளம்பைக் கேணி - 03 சமூக ஆர்வலர்கள் ஆகியோருக்கும், இக் கற்கை நெறியை நடத்துவதற்கு இட வசதி ஏற்படுத்தித் தந்த பள்ளிவாசல் தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோருக்கும் அஹதிய்யாப் பாடசாலையின் அதிபர் நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வில் நூறாணிய்யா ஜும்ஆப் பள்ளிவாசலின் தலைவர் ஏ.சி. அன்வர், அஸ் ஸிராஜ் பாடசாலையின் முன்னால் அதிபர் எஸ்.எம்.எம். யூசுப் மற்றும் சென்ட்ரல் கேம்ப் ஜி. எம். எம். எஸ் பாடசாலையின் அதிபர் வை.பி.ஏ. சுல்தான் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டிருந்தனர்.

அத்தோடு பள்ளிவாசல் நிர்வாக உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



### மட்டு. போதனா வைத்தியசாலை

# பெண் மருத்துவர்களிடம் அநாகரிகமாக தொலைபேசியில் உரையாடிய மர்ம நபர்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையில் இருந்த பெண் வைத்தியர்களை சந்தேகநபர் ஒருவர் தொலைபேசி ஊடாக அநாகரிகமான வார்த்தைகளால் பேசினார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலையில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

குறித்த வைத்தியசாலை தொலைபேசி பரிவத்தனை நிலையத்துக்கு இனம் தெரியாத ஒருவர் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியுள்ளார்.

இவர் வைத்தியசாலையில் பணியாற்றுகின்ற பெண் ஊழியர்கள் மற்றும் பெண் வைத்தியர்கர்களிடம் அநாகரிகமான வார்த்தைகளால் பேசியுள்ளார்.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட வைத்தியர்கள், ஊழியர்கள் வைத்தியசாலை பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதையடுத்து இது தொடர்பாக பொலிஸ் நிலையத்திலும் குற்றவியல் பிரிவிற்கும் முறைப்பாடுகளை செய்துள்ளனர்.

# விளையாடிக் கொண்டிருந்த சிறுமியின் சங்கிலி அறுப்பு

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, நகரசபைப் பூங்காவில் விளையாடிக்கொண்டிருந்த சிறுமி ஒருவரின் சங்கிலியை இரு பெண்கள் அறுத்துச் சென்றுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வவுனியா, பூங்கா வீதியில் அமைந்துள்ள நகரசபை பூங்கா பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சிறுமி ஒருவர் விளையாடிக் கொண்டிருந்த போது அச் சிறுமியின் அருகில் சென்ற இரு பெண்கள் அச் சிறுமியுடன் கதைப்பது போன்று கதைத்து சிறுமி அணிந்திருந்த சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர் என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான பரப்புரையை ஆரம்பித்த இ.தொ.கா.

(நூருல் ஹுதா உமர்)

பதுளை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சேவல் மற்றும் ரெலிபோன் சின்னங்களில் போட்டியிடுகின்ற நிலையில், தேர்தல் பிரசாரத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்தார்.



தோட்டத்திலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வெற்றியை உறுதி செய்யும் வகையில் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

எல்லபிரதேசசபைக்குஉட்பட்ட நமுனுகல, பிங்கராவ , இந்தகல ஆகிய தோட்டங்களிலும், ஹப்புதலை பிரதேச சபைக்கு உட்பட்ட ஹப்புத்தலை , பிளக்வூட், புதுக்காடு ஆகிய தோட்டங்களிலும், பண்டாரவளை பிரதேசசபைக்கு உட்பட்ட நாயபெத்த



# ராணுவத் தளபதி யாழுக்கு வருகை


இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ அண்மையில் யாழ். மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.





இந்த விஜயத்தின் போது, இராணுவத் தளபதி சர்வ மத தலங்களில் வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் மதத்தலைவர்களுடன் சந்தித்து கலந்துரையாடினார்.

வரணி மத்திய கல்லூரியில் மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் இராணுவத் தளபதி கலந்து கொண்டார்.



மேலும் கொடிகாமம் தெற்கில் நிர்மாணிக்கப்பட்ட புதியவீடும் பயனாளி ஒருவரிடம் கையளிக்கப்பட்டது.

யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத்திற்கு விஜயம் செய்த இராணுவத் தளபதியை, யாழ் பாதுகாப்புப் படைத்தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் வை.ஏ.பி.எம். யஹாம்பத் வரவேற்றதுடன் விசேட சந்திப்புக்களும் இடம்பெற்றன.

# மருந்து விற்பனை நிலையங்களில் கிண்ணியாவில் அதிரடி சோதனை

(ஹலால்தீன்)

கிண்ணியாவிலுள்ள தனியார் மருந்து விற்பனை நிலையங்கள் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரியால் திடீர் பரிசோதனை செய்யப்பட்டது.



கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அஜித் தலைமையில் பொது சுகாதார பரிசோதகர்களின் பங்களிப்புடன் கிண்ணியாவில் உள்ள மருந்து விற்பனை நிவையங்கள் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

காலவாதியான மற்றும் விற்பனைக்கு உதவாத மருந்துகள் என்பன பரிசீலணை செய்யப்பட்டன. பரிசீலணையின் போதும் தரமான மருந்துப் பொருள்கள் விற்பனை செய்வது உறுதிப்படுத்தப்பட்டன.

இந்த திடீர் அதிரடி நடவடிக்கையால் மக்கள் தரமான, மருந்து பொருள்களை கொள்வனவு செய்வது உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.-



## குரல்கொடுப்பதை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை கழட்டிப்பார்க்கட்டும், எனது வாகனத்திலும் நான் ஸ்டிகர் ஒட்டுவேன் - என்றார்.

## 9 கி. கஞ்சா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் 40 வயது மதிக்கத்தக்கவர்கள்.

## நான்கே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ள வசதி வாய்ப்புக்களை ஆராய்ந்தார். .

பலாலி விமான நிலையத்திற்கு முதல் தடவையாக வருகை தந்திருந்த அமைச்சர், விமான நிலையத்தின் விரிவாக்கப் பணிகள் தொடர்பிலும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் ஹர்ச அபய விக்ரம மற்றும் விமான நிலைய ஊழியர்களுடனும் அவர் கலந்துரையாடி நிலமைகளைக் கேட்டறிந்தார்.

விமான நிலையத்தைப் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது, ''விமான நிலையத்தின் கட்டுமானம் தொடர்பில் வரைபடம் உருவாக்கல் உள்ளிட்ட பல்வேறு பணிகளும் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன. எனவே திட்டமிடலுக்கு ஏற்ப நான்கு மாதங்களுக்குள் இந்த விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக மாற்றியமைக்கப்படும்'' என்றார்.

கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், ஸ்ரீபவானந்தராஜா ஆகியோரும் இந்த பயணத்தில் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுடன் இணைந்திருந்தனர்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

வவுனியா பழைய பஸ் நிலையப்பகுதிக்கு முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசு போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக்கூறுவதிலிருந்து நீண்டகாலமாகத் தவறியுள்ளது. இதனால் நாம் சர்வதேச நீதிகோரி தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்துவருகிறோம். இன்று போர்குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்ட சில இராணுவத் தளபதிகளுக்குப் பிரித்தானியா பயணத் தடைவித்துள்ளதன் மூலம் இனப்படுகொலை ஒன்று இங்கு நடந்துள்ளதை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதை உணரமுடியும்.

இவ்வாறு தடைவிதிக்கப்படவேண்டிய இன்னும் பல இராணுவத்தினர் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளும் உள்ளனர். அவர்கள் மீதும் இவ்வாறான தடைகளை விதிக்கவேண்டும். அனைத்துலக நாடுகளும் இந்த பயணத் தடைகளை விதித்து குற்றம் செய்தவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தி சர்வதேச பொறிமுறையூடாக எமக்கான நீதியை பெற்றுத்தரவேண்டும். இதுவே எமது எதிர்பார்ப்பு.

இதேவேளை 19 காணாமல் போன உறவுகள் உயிருடன் இருப்பதை தாம் கண்டுபிடித்துள்ளதாக காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்தினர் அண்மையில் கூறியுள்ளனர். அவர்கள் உண்மையில் காணாமல் ஆக்கப்பட்டோர் இல்லை. நாம் தந்த சாட்சியங்களில் ஒன்றைகூட அந்த அலுவலகத்தினர் கண்டுபிடிக்கவில்லை. மாறாக சர்வதேசத்துக்கு அப்பட்டமான பொய்களைச் சொல்கின்றனர். பொய்யான அறிக்கைகளை அவர்கள் வெளியிடுகின்றனர். எனவே எமது மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். இந்த நிலையில் சர்வதேச நீதிப் பொறிமுறையூடாகவே எமக்கான நீதியை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் -என்றனர்.

## சுன்னாகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவசாய நிலங்களைக் கொண்ட பகுதி. இந்த சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் எண்ணெய் கழிவுகள் எங்கு செல்கின்றது என்பது தொடர்பிலும் ஏதும் தெரியாத நிலையே நீடிக்கின்றது.

இவ்வாறான நிலையில் முன்பு ஏற்பட்ட பாரிய அனர்த்தம் போன்று எதிர்காலத்தில் கழிவு எண்ணெயால் ஏற்படும் ஆபத்தை தவிர்ப்பதற்கு அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் பிரதிநிதி தெரிவித்தார்.

''-சுன்னாக நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் தாக்கம் தொடர்பில் நான் நன்கு அறிவேன். ஆகையால் பொதுமக்களின் குற்றச்சாட்டு தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு அதிகாரிகளுக்கு இருக்கிறது. நீர்வளங்கள் சபை அதிகாரிகள் சுன்னாகப் பகுதியில் உள்ள 5 குடி நீர் கிணறுகளின் நீர் மாதிரிகளில் எண்ணெய் படலம் இருக்கிறதா என்பது தொடர்பில் பரிசோதனை செய்து பிரதேச அபிவிருத்தி குழுவுக்கு அறிக்கை வழங்கவேண்டும்'' என்று அபிவிருத்திக் குழுக் கூட்டத் தலைவர் உத்தரவிட்டார்.

அதேபோன்று வாகன சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு எண்ணெய் எவ்வாறு வெளியேற்றப்படுகிறது என அறிக்கை சமர்ப்பிப்பதோடு, சுற்றாடல் அதிகார சபையினால் குறித்த சுத்திகரிப்பு நிலையத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிகள் தொடர்பிலும் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உடுவில் பிரதேச சபைச் செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

## 47 வருடங்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம், பலாலி விமானநிலையத்திலிருந்து மீண்டும் 36 பயணிகளுடன் மாலை 3 மணியளவில் விமானம் திருச்சியை நோக்கிப் புறப்பட்டது.

இந்த விமான சேவை திருச்சியிலிருந்து பிற்பகல் 1.25 க்கு புறப்பட்டு பிற்பகல் 2.25 க்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும் என்றும், யாழ்ப்பாணத்திலிருந்து பிற்பகல் 3.05க்குப் புறப்படும் விமானம், மாலை 4.05க்கு திருச்சியைச் சென்றடையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். இராமேஸ்வரத்தின் அனைத்து விசைப்படகு சங்க செயலாளர் சகாயம் தலைமையிலான இந்திய மீனவ பிரதிநிதிகள் குழுவினர் யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பாடல் காரியாலயத்தில் அமைச்சரைச் சந்தித்துப் பேசினர்.

சந்திப்பு தொடர்பில் அமைச்சர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்பதை இந்திய மீனவர்கள் உணர்ந்தனர் என்பதை அறியமுடிந்தது. எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறல் மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையை தடுத்து நிறுத்துவதற்கும், இது தொடர்பில் அடுத்தகட்டப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இதற்கமைய அமைச்சு மற்றும் அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரையாடல் எதிர்வரும் நாட்களில் நடைபெறும் - என்றுள்ளது.

# யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் 'கிளீன் சிறீலங்கா' நேற்று தொடக்கம்

கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் மூலம் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தை அழகுபடுத்தும் வேலைகள் நேற்றுத் தொடங்கப்பட்டன.

இராணுவத்தினர், பொலிஸார், இலங்கை போக்குவரத்து சபையினர் இணைந்து இந்த வேலைகளில் ஈடுபட்டனர். இதன் தொடக்க நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான இளங்குமரனும் கலந்துகொண்டிருந்தார்.

இனிவரும் காலத்தில் பேருந்து நிலையத்தில் விளம்பரங்களை ஒட்டுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கு தெரிவித்தார்.



**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**

**076 3983858**

**மின்னஞ்சல் முகவரி:**

kalaikkathirnews@gmail.com



# இம்ரான் எம்.பியின் நோன்பு பெருநாள் வாழ்த்துச் செய்தி

(ஹலால்தீன்)

புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் இஸ்லாமிய உறவுகள் அனைவருக்கும் என்மனம்கனிந்த பெருநாள் வாழ்த்துக்கள்



ஈதுக்கும் முபாரக்-தகப்பலல்லாஹு மின்னா வமின்கும் ஸாலிஹல் அஃமால்மலரும்இப்புனிதப்பெருநாள்இம்மண்ணில் அமைதியையும் நிம்மதியையும் சுபீட்சத்தையும் சுமந்து வரவேண்டுமென பிரார்த்தின்றேன்.

அல்குர்ஆன் எமது வாழ்க்கை வழிகாட்டி என்ற நிலையை எவருக்காகவும் நாம் விட்டுக்கொடுக்கவும்மாட்டோம். மனிதத்தை வாழவைக்கும்நீதியை நிலைநாட்டும்சகவாழ்வுக்கான போராட்டமே எம் வழிமுறை. எல்லாவற்றுக்கும் மேலாக இறைதிருப்தியேஎமதுஇலக்காக இருக்கின்றது. இந்த உறுதியோடு இன்று எம்மை அச்சுறுத்தும் அசாதாரண சூழல், மனித உரிமை மீறல்கள், மத துவேஷங்கள், அத்துமீறல்கள் அனைத்தும் நீங்கி நம் நாடு எழுச்சி பெற இப் புனிதநாளில்அல்லாஹ்வைப்பிரார்த்திகின்றேன். வலிகளோடு கடந்து போகும் காஸா உறவுகளின் வாழ்வில் வெற்றியையும் சந்தோஷத்தையும் ஏற்படுத்தவல்ல ஆரம்பத்தை இப்புனித நாளில் எல்லாம் வல்ல அல்லாஹ் அமைக்க வேண்டும் என்றும் இரு கரமேந்தி பிரார்த்திக்கின்றேன். - என்றுள்ளது.

# இப்தார் நிகழ்வுகள்

(ஸாகிர்)

முஸ்லிம்சமய, கலாசாரதிணைக்களத்தின் ஏற்பாட்டில், வருடாந்த இப்தார் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை திணைக்கள வளாகத்தில் இடம்பெற்றன.

முஸ்லிம்சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர்எம்.எஸ்.எம்.நவாஸ்தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப், பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலிஹ், தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முழப்பர் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

பௌத்த, கிறிஸ்தவ, இந்து



திணைக்களங்களின் பணிப்பாளர்கள் மற்றும் முன்னாள் பணிப்பாளர்கள், புத்த சாசன அமைச்சின் அதிகாரிகளும், இந்து, கிறிஸ்தவ திணைக்களத்தின் ஊழியர்கள், பள்ளிவாசல் சம்மேளனங்களின் தலைவர்கள்,



சர்வ மதத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

திணைக்களத்தின்பணியாற்றும்அனைத்து ஊழியர்களும், விருந்தினர்களும்இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

திணைக்கள பணிப்பாளர் எம்.எஸ்.எம் நவாஸ் வரவேற்புரையை நிகழ்த்தியதோடு, பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலிஹ், பிரதி அமைச்சர் முனீர் முழப்பர் ஆகியோரும் உரையாற்றினர்.

மௌலவி இர்ஷாத் ஹமைதி விசேட உரை ஆற்றினார். நன்றி உரை திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.என். பிர்னாஸ் நிகழ்த்தினார்.

(ஸாகிர்)

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி கல்முனைக் கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'ஐக்கியம் சகவாழ்வுக்கான' இப்தார் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கல்முனை மையோன் பிளாஸா கல்யான மண்டபத்தில் இடம்பெற்றது.



இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி கல்முனைக்கிளையின் பொறுப்பாளர் எஸ்.எல்.எம்.கரீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பல்லினங்களைச் சேர்ந்த பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஜாமிஆ நளீமியா கலாபீட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எஸ்.எல்.எம். ஹஸ்ஸான் (நளீமி) மார்க்க சொற்பொழிவு ஆற்றியதுடன் பிரமுகர்களாகக் கலந்து கொண்ட நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் வீ. ஜெகதீசன் மற்றும் கல்முனை பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெனிதா மோகன் ஆகியோர் சகவாழ்வுக்கான அவசியம் குறித்து தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்கள் பலர் இவ்வாறான இப்தார் நிகழ்வுகள் பிற சமூகங்களின் மதகலாசார விடயங்களை அறிந்து கொள்வதற்கும் புரிந்துணர்வுகளை வளர்த்துக் கொள்வதற்கும் வாய்ப்பாக அமைவதால் தொடர்ந்தேர்ச்சையாக இவ்வாறான சகவாழ்வு ஒன்றுகூடல்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி கருத்துத் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.



# புதுப்பொலிவுபெறும் அக்கரைப்பற்று மணிக்கூண்டுக் கோபுரம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாதிருந்த அக்கரைப்பற்று மணிக்கூண்டுக் கோபுரம் தற்போது வர்ணம் பூசப்பட்டு, புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.



அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக தனியார் பங்களிப்புடன் புனரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்து புனரமைப்பு பணிகளுக்காக அக்கரைப்பற்று மாநகர சபையின் எவ்வித நிதியும் பயன்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல், மோசமாக காட்சியளித்துக் கொண்டிருந்த இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தை புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்ட

அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் அவர்களுக்கு வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

# அக்கரைப்பற்று பிரதான வீதியில் மின் விளக்கு தொகுதிகள் திருத்தம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

அக்கரைப்பற்று பிரதான வீதியில் கடந்த சில காலமாக ஒளிராமல் செயலிழந்து காணப்பட்ட தெருமின்விளக்கு தொகுதிகள் தற்போது துரிதமாக திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன.



அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸின் நேரடிக்கண்காணிப்பில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் பிரகாரம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை தொடக்கம் தைக்கா நகர் வரையான பிரதான வீதியில் மின்குமிழ்கள் புதிதாக பொருத்தப்படப்பட்டு, ஒளியூட்டப்பட்டுள்ளன.

இவ்வேலைத் திட்டத்தின் கீழ் கட்டம் கட்டமாக அனைத்துப் பகுதிகளிலும் தெரு விளக்கு தொகுதிகள் திருத்தியமைக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.






# தேர்தல் பரப்புரைகளின்போது கலாசார சீர்கேடான விடயங்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் இல்லை

## நாபீர் பௌண்டேசனின் ஸ்தாபகர் தெரிவிப்பு



(அபு அலா)

சம்மாந்துறை பிரதேச சபையை முதலாம் இலக்க மாம்பழச்சின்ன சுயேட்சைக்குழு கைப்பற்றுமென்று நாபீர் பௌண்டேசனின் ஸ்தாபகரும் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான பொறியியலாளர் உதுமான்கண்டு நாபீர் தெரிவித்தார்.

சம்மாந்துறை ஈ.சி.எம். நிறுவன கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாபீர் பௌண்டேசன் சார்பில் தெரிவாகும் உறுப்பினர்கள் யாரும் எவ்வித ஊதியங்களையும் பெறமாட்டார்கள். அவர்களின் வாழ்வாதாரத்துக்குத் தேவையான நிதியை நாபீர் பௌண்டேசன் வழங்கும்.

மாட்டிறைச்சி விலையை குறைந்த விலையில் பொதுமக்களுக்கு வழங்குவதற்கான யுக்தி எங்களிடம் இருக்கின்றன. அதை நாம் இப்போது சொல்லமுடியாது. அவ்வாறு சொன்னால் பிற கட்சிகள் கொப்பி பண்ணிவிடுவார்கள்.

குறிப்பாக, பிரதேச சபை சட்டத்திற்கமைவாக சம்மாந்துறை பிரதேச மக்களும், ஏனையவர்களும் பயன்பெறும் பொருட்டு மரக்கறித் தோட்டங்கள் நிறுவப்படும். அதற்கான இடங்களை அடையாளங்கண்டு வைத்துள்ளோம்.

வெற்றிபெறும் எங்களது சுயேச்சைக்குழு எதிர் அரசியல் செயற்பாடுகளில் ஒருபோதும் ஈடுபடாது. ஏனைய கட்சிகளூடாக சபைக்குத் தெரிவாகும் உறுப்பினர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு சம்மாந்துறையில் புதிய அரசியல் கலாசாரம் தோற்றுவிக்கப்படும்.

எங்களின் தேர்தல் பிரச்சாரங்களின்போது போஸ்ட்டர்கள், பதாதைகள், துண்டுப்பிரசுரங்கள், மது போதை, அடிதடி போன்ற கலாசார சீர்கேடான விடயங்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் எங்களிடம் அறவேயில்லை. அந்த நடைமுறைகளை முற்றுமுழுதாக நாங்கள் புறக்கணிக்கின்றோம்.

சம்மாந்துறை மக்கள் எங்களுக்கான அதிகாரத்தை வழங்கினால் குறிப்பிட்ட கால எல்லைக்குள் மக்கள் நலன் திட்டங்களை ஆரம்பித்து குறைந்தது 2000 பேருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவோம்.

சம்மாந்துறை பிரதேச சபையை உதாரணம் கூறுமளவுக்கு சமூகங்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்த பல்வேறு திட்டங்கள் எங்களிடம் இருக்கின்றன.

எவ்வித அரசியல் அதிகாரங்களும் இல்லாமல் கடந்த 32 வருடங்களுக்கு மேலாக பல்வேறு சமூக நலன் சார்ந்த திட்டங்களை இன்றுவரை முன்னெடுத்து வருகிற நாபீர் பௌண்டேசனின் மீது சம்மாந்துறை பிரதேச மக்கள் மாத்திரமல்ல ஏனைய மாவட்டங்களிலும் உள்ள மக்கள் எங்கள் மீது அதிக நம்பிக்கை வைத்துள்ளனர்.

அதற்கான ஆரம்பமே சம்மாந்துறை பிரதேச சபையை நாங்கள் கைப்பற்றும் செயற்பாடுகளுக்கு மக்கள் தீர்ப்பை வழங்கவுள்ளார்கள். நான் எப்போதும் மக்களின் தீர்ப்புக்கு மதிப்பளிப்பவன் என்ற அடிப்படையில் நாபீர் பௌண்டேசனின் பணிகள் தொடரவேண்டுமா? என்பதை மக்களே தீர்மானிக்கட்டும் அதனை மக்களது கரத்திலேயே விட்டுவிடுகின்றேன் என்று தெரிவித்தார்.

# நோன்பு பெருநாளை முன்னிட்டு கிழக்கு முஸ்லீம் பாடசாலைகளுக்கு விடுமுறை!

(ஹஸ்பர்)

புனித நோன்புப் பெருநாளினை முன்னிட்டு, கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் புனித நோன்புப் பெருநாள் விடுமுறை தினமான 31.03.2025 ஆம் திகதிக்கு மறுநாள் செவ்வாய்க்கிழமை (01.04.2025) விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர அவர்கள் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தலை ஊடகங்களுக்கு ஆளுனரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.

அதற்கான பதில் பாடசாலையானது 05.04.2025 சனிக்கிழமை நடைபெறும் எனவும் அத்துடன் கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகள் வழமைபோல் நடைபெறுமெனவும் தெரியப்படுத்தியுள்ளார்.



# அக்கரைப்பற்றில் வாகன நெரிசலை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் தேவை

## மாநகர ஆணையாளர் பொலிஸாருக்கு அறிவுறுத்தல்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

றமழான் நோன்புப் பெருநாள் தினங்களில் அக்கரைப்பற்று மாநகர கடற்கரை பிரதேச வீதிகளில் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் அக்கரைப்பற்று பொலிஸாரைக் கேட்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

நோன்புப் பெருநாள் தினங்களில் அக்கரைப்பற்று கடற்கரைக்கு பெருந்தொகையான பொதுமக்கள் வாகனங்கள் மூலமாகவும், கால்நடையாகவும் வந்து பண்டிகையைக் கொண்டாடுவது வழக்கமாகும்.

இதன்போது வீதிகளில் நீண்ட வரிசையில் வாகனங்கள் நிறுத்தப்படுவதாலும் வீதிகளின் இரு பக்கமும் வாகனங்கள் செலுத்தப்படுவதாலும் பாரிய போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன் விபத்துகளுக்கும் வாய்ப்பாக அமைகிறது. இதனால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிடுகிறது.



எனவே, இப்பகுதியில் வாகன நெரிசல்களையும் விபத்துகளையும் தேவையற்ற அசௌகரியங்களையும் தவிர்த்து, பொது மக்கள் அமைதியான முறையில் பெருநாள் கொண்டாட்டங்களில் ஈடுபடும் பொருட்டு குறித்த வீதிகளில் முறையான பொறிமுறை ஒன்றினூடாக போக்குவரத்து ஒழுங்குமுறைகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஆணையாளர் நௌபீஸ் வலியுறுத்தியுள்ளார்.

# கல்முனை கடற்கரைப் பகுதி பிரதேசங்களுக்கு மின்னொளி

## மாநகர சபை நடவடிக்கை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கடற்கரைப் பிரதேசங்களில் மக்கள் ஒன்றுகூடுகின்ற பல முக்கிய இடங்கள் பிரகாசமிக்க மின்விளக்குகளால் ஒளியூட்டப்பட்டுள்ளன.

நோன்புப் பெருநாளை முன்னிட்டு கடற்கரைப் பகுதிகளுக்கு வருகைதருகின்ற பொது மக்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களைக் கருத்தில் கொண்டும் குற்றச்செயல்களை தடுக்கும் நோக்கிலும் கல்முனை மாநகர சபை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதாக மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி தெரிவித்தார்.

இதன் பிரகாரம் விஷேடமாக ஒரு தொகுதி பிரகாச மின்விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டு, அவை கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட சாய்ந்தமருது தொடக்கம் பெரிய நீலாவணை வரையான கடற்கரைப் பிரதேசங்களில் மக்கள் பொழுதுபோக்கிற்காக ஒன்றுகூடுகின்ற பகுதிகளில் துரிதமாக பொருத்தப்பட்டு, ஒளியூட்டப்பட்டுள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடற்கரை வீதியில் ஏற்கனவே பொருத்தப்பட்டிருக்கும் தெரு விளக்குகளுக்கு மேலதிகமாக கடற்கரைப் பகுதிகளை நோக்கியதாக இந்த புதிய மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.03.2025இல் வெளியிடப்பெற்றது